**Judicial Form No.53**
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
**(Chapter XXII, Cr.P.C.)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 1034 of 2025

Depositions of PW -3 witness for ________ Prosecution / Defence / Court

Name : நாராயணசாமி

Father's Name : ரங்கசாமி

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 29th **day of April** 2026.

**(எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

நான் கோவை மாவட்டம் சூலூர் தாலுகாவில் குடியிருந்து கொண்டு அயனிங் வேலை செய்து வருகிறேன். பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 17.08.2025 ஆம் தேதி நான் சம்பவம் நடந்த பொழுது அங்கு இல்லை, என் கடைக்கு முன்பாக ஏதோ சண்டை நடந்துள்ளது, அது சம்பந்தமாக அன்றைய தினம் போலீசார் என்னிடம் வந்து கையொப்பம் செய்யுமாறு கேட்டு என்னிடம் கையொப்பம் வாங்கிக் கொண்டார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதி கோரப்பட்டு சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

கடந்த 17.08.2025 ம் தேதி ஐயப்பன் மெஸ் முன்பாக காலை 11.00 மணியளவில் பிரச்சனை ஏற்பட்டது என்றும், அது சம்பந்தமாக அன்றைய தினம் மதியம் சுமார் 02.00 மணியளவில் நான் என்னுடைய கடையிலிருந்த பொழுது, அங்கு வந்த சூலூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு என் முன்னிலையிலும், முருகேசன் அவர்கள் முன்னிலையிலும் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், மேலும் சம்பவ இடத்தில் இருந்த உடைந்த பியர் பாட்டிலை போலீசார் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினார்கள் என்றும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்பொழுது போலீசார் நான் கடையில் இருந்த பொழுது கையொப்பம் செய்யுமாறு கேட்டுக் கொண்டதற்காக கையொப்பம் செய்ததாக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியும் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

**Signature of Witness**

**Sd./-T.Arunkumar**
**Judicial Magistrate,**
**Sulur.**